## September 29, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஆசிய நீச்சல் சாம்பியன்ஷிப்பில், முதல் நாளிலேயே இந்தியாவின் ஸ்ரீஹரி நட்ராஜ், இரு வெள்ளி, ஒரு வெண்கலம் என 3 பதக்கங்கள் வென்று சாதனை படைத்தார்.
    i. ஆசிய சாம்பியன்ஷிப்பில் ஒரே எடிஷனில் ஒன்றுக்கும் மேற்பட்ட பதக்கங்கள் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை அவர் பெற்றார். கண்டங்கள் அளவில் இதுபோன்ற பிரதான போட்டியில் இந்தியா பதக்கம் வென்றதும், கடந்த 16 ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும்.
    ii. 11-ஆவது ஆசிய நீச்சல் சாம்பியன்ஷிப், அகமதாபாதில் தொடங்கியது.
2. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (பிசிசிஐ) புதிய தலைவராக, தில்லி அணி முன்னாள் கேப்டன் மிதுன் மானஸ் (45) போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டார்.
    i. மும்பையில் நடைபெற்ற பிசிசிஐ-யின் 94-ஆவது ஆண்டு பொதுக் கூட்டத்தில் அவர், 37-ஆவது தலைவராகத் தேர்வானார்.
    ii. அந்தப் பதவியில் இருந்த முன்னாள் வீரர் ரோஜர் பின்னி (70) கடந்த மாதம் ராஜிநாமா செய்த நிலையில் செய்யப்பட்டுள்ளார். தற்போது புதிய தலைவராக மிதுன் மானஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
3. ஜூனியர் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியாவுக்கு 2 பதக்கங்கள் கிடைத்தன.
    i. 50 மீட்டர் ரைஃபிள் 3 பொசிஷன்ஸ் மக ளிர் தனிநபர் பிரிவில்,அனுஷ்கா தாகுர் 461 புள்ளிகளுடன் தங்கத்தை தட்டிச் சென் றார்.
    ii. ஏற்கெனவே, போட்டியின் தொடக்க நாளில் 50 மீட்டர் ரைஃபிள் புரோன் பிரி அனுஷ்தா வில் தங்கம் வென்ற அனுஷ்காவுக்கு இது 2-ஆவது தங்கமாகும்.
4. சாகித்திய அகாதெமியும் மத்திய கலாசார அமைச்சகமும் இணைந்து பிகார் தலைநகர் பாட்னாவில் உன்மேஷா சர்வதேச இலக்கியத் திருவிழாவை நடத்தின.
5. சட்டவிரோத பந்தய செயலி வழக்கு தொடர்பாக சில திரைப்பட நடிகர்கள், கிரிக்கெட் வீரர்களின் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துகளை முடக்க அமலாக்கத் துறை நடவடிக்கை எடுத்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.
    i. '1 எக்ஸ் பெட்' என்ற செயலி உள்பட பல்வேறு இணையவழி சூதாட்ட செயலிகள் முதலீடு, வாடிக்கையாளர்களிடம் பணம் வசூலித்தது என கோடிக்கணக்கில் பணத்தை சட்டவிரோதமாக கையாண்டுள்ளன. மேலும், விளையாட்டு, பந்தயம் என்ற பெயரில் மக்களிடம் இருந்து முறை கேடாக கோடிக்கணக்கில் பணத்தை சம்பாதித்துள்ளன. இது தொடர்பான பண முறைகேடு வழக்கை அமலாக்கத் துறை விசாரணை நடத்தி வருகிறது.
    ii. விசாரணையின் ஒருபகுதியாக இந்த பந்தய, சூதாட்டச் செயலிகளில் தோன்றும் திரைப்பட நட்சத்திரங்கள், விளையாட்டு வீரர்களிடமும் விசாரணை நடத்தப்பட்டது.
    iii. கிரிக்கெட் வீரர்கள் யுவராஜ் சிங், சுரேஷ் ரெய்னா, ராபின் உத்தப்பா, நடிகர்கள் சோனு சூட், திரிணமூல் காங்கிரஸ் முன்னாள் எம்.பி.யும், நடிகையுமான மிமி சக்ரவர்த்தி மற்றும் சில சமூக வலைதள பிரபலங்கள் உள்ளிட்டோரிடம் கடந்த ஒரு மாதத்தில் விசாரணை நடத்தப்பட்டது.
    iv. இணையவழி பந்தய செயலிகளை இந்தியாவில் 22 கோடி பேர் பயன்படுத்தி வந்துள்ளனர். இதில் 11 கோடி பேர் நாள்தோறும் இந்தச் செயலிக ளில் பந்தயம் கட்டி பணத்தை இழந்துள்ளனர்.
    v. இணையவழி விளையாட்டுகள் மூலம் ஏற்படும் நிதி மோசடிகள், பணப் பரிவர்த்தனை குற்றங்கள் மற்றும் மக்களின் நிதி இழப்பைத் தடுக்கும் நோக்கில் கொண்டு வரப்பட்ட 'இணையவழி விளையாட்டு மேம்பாட்டு மற்றும்

ஒழுங்காற்று சட்ட மசோதா-2025 கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

6. வங்கதேசத்தில் வருடாந் திர துர்கா பூஜை திருவிழா ஞாயிற்றுக் கிழமை தொடங்கியது. இதையொட்டி, நாடு முழுவதும் 2 லட்சத்துக்கும் மேற் பட்ட வீரர்கள், பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
   i. ஹிந்துக்கள் சிறுபான்மையினராக உள்ள வங்கதேசத்தில் ஒவ்வொரு ஆண் டும் துர்கா பூஜை திருவிழா 5 நாள்கள் கொண்டாடப்படுவது வழக்கம். நடப்பாண்டு விழா, பலத்த பாதுகாப்புடன் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

7. இண்டியன் ஸ்ட்ரீட் ப்ரீமியர் லீக் (ஐஎஸ்பிஎல்) டென்னிஸ் பால் கிரிக்கெட் தொடர் வரும் 2026 ஜன. 9-ஆம் தேதி குஜராத் மாநிலம் சூரத்தில் முதன்முறையாக நடைபெறுகிறது.
8. கரூரில் தவெக தலைவர் விஜய் பிரசாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 40 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக ஒருநபர் ஆணையம் அளிக்கும் அறிக்கை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.